**கோவை, தொழிலாளர் இணை ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள்**
**முன்னிலை - திரு.ப.மாரிமுத்து எம்.ஏ., எம்.எல்., பிஜிடிபிஎம்.,**

**சுருக்கம்**

பணிக்குழு - தொழிலாளர் துறை - தமிழ்நாடு அமைச்சுப்பணி - திரு.வி.விஸ்வநாதன், தட்டச்சர், தோட்ட நிறுவன ஆய்வாளர் அலுவலகம், ஏற்காடு - தட்டச்சர் பதவியில் 25.03.2013 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்யப்பட்டு தகுதி காண் பருவத்தில் வைத்து - உத்தரவிடப்படுகிறது.

---

நாள் - .06.2014.

ந.க.எண்.அ/2384/2014

**படிக்கப்பட்டது**

1. அரசாணை எண்.10, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள் - 14.12.1995.
2. அரசாணை எண்.190, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள் - 20.09.2007.
3. தமிழ்நாடு, அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கடிதம் எண்.7244/PSD-A4 /2012, நாள் - 07.02.2013.
4. சென்னை, தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள் எண்.ஜி3/06045/2013-4, நாள் - 12.03.2013.
5. ஏற்காடு, தோட்ட நிறுவன ஆய்வாளர் கடிதம் எண்.670/2013 நாள்.31.01.2014.
6. சேலம், தொழிலாளர் துணை ஆணையர் கடிதம் எண்.அ1/10621/2013, நாள்.05.05.2014

---

**ஆணை**

மேலே 3-ல் படிக்கப்பட்ட கடிதத்தின்படி சென்னை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தட்டச்சர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டு தொழிலாளர் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு மேலே 4-ல் படிக்கப்பட்ட செயல்முறை ஆணைகளின்படி தமிழ்நாடு மாநில சார்நிலைப்பணி விதிகளின் கீழான பொது விதி 10(ஏ)(1)-ன்படி தட்டச்சராகப் பணியமர்த்தப்பட்ட திரு.வி.விஸ்வநாதன் 25.03.2013 முற்பகல் ஏற்காடு, தோட்ட நிறுவன ஆய்வாளர் அலுவலகத்தில் தட்டச்சராகப் பணியில் சேர்ந்துள்ளார்.

இவர் பணியில் சேர்ந்த நாளான 25.03.2013 முற்பகல் முதல் தட்டச்சர் பணியில் பணிவரன் முறைப்படுத்தப்பட்டு அந்நாள் முதல் தகுதி காண் பருவத்தில் வைக்கப்படுவதுடன் பணிவரன்முறை செய்த நாளிலிருந்து தொடர்ச்சியான மூன்றாண்டு பணிக்காலத்தில் ஈராண்டு கால தகுதிகாண் பருவத்தினை திருப்திகரமாக முடிக்க வேண்டுமென இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

மேலும் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து 2 ஆண்டு காலத்திற்குள் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதி 34-ன்படி மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்விலும், மற்றும் அரசாணை எண்.130, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை நாள்- 22.07.2008-ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு **Directorate of Technical Education** நடத்தும் **"Certificate course in Computer on Office Automation"** என்ற பயிற்சி தேர்வில் தேர்ச்சி பெற வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

தொழிலாளர் இணை ஆணையர்,
கோவை
20.06.2014

பெறுநர்
திரு.விஸ்வநாதன்,
தட்டச்சர், தோட்ட நிறுவன ஆய்வாளர் அலுவலகம், ஏற்காடு

Scanned with CamScanner

நகல்

1. தோட்ட நிறுவன ஆய்வாளர், ஏற்காடு (திரு.வி.விஸ்வநாதன், தட்டச்சரின் பணிப்பதிவேடு (1 தொகுதி) இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. இப்பணிப்பதிவேடு பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்)
2. தொழிலாளர் துணை ஆணையர், சேலம்
3. பணிப்பதிவேடு/முக்கிய ஆணைத் தொகுப்பு

<u>நகல் சமர்ப்பிக்கப்படுகிறது</u>

தொழிலாளர் ஆணையர், சென்னை - 06.

Scanned with CamScanner